கழக வெளியீடு—௬௭௬

பிழையின்றிப் பேசுக

[சிறுவர்கட்குக் கதை வழி விளக்குவது]

வ. சுப்பையா
எழுதியது

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: :: சென்னை

முதற் பதிப்பு—டிசம்பர் 1944

முன்னுரை

தமிழ்ச் சொற்களைத் தமிழ் மக்கள் திருத்தமாக ஒலித்துப் பேசாமையால், அவை திரிபுற்றுத் தவறான வடிவங்களில் வழங்குகின்றன. பேச்சில் தவருக ஒலிப்பதைக் கேட்டுப் பழகினமையால் எழுதும்போதும் அவர்கள், சொற்களைத் திரித்து எழுதிவிடுகின்றனர். அதனல், அறிக்கைகள், விளம்பரப் பலகைகள், கடிதங்கள், மாணவர் எழுதுங் கட்டுரைகள் முதலியவற்றிற் பல பிழைகள் காணப்படுகின்றன.

கருத்துக்களை வேண்டுமானுலும் சிலர் எழுதலாம். ஆனல், அவர்கள் எழுதியதைத் தமிழ்ப் புலவர்கள் கட்டாயம் பார்வையிடுதல் வேண்டும். அதன் பின்பே அதனை அச்சிடுதல் நன்ருகும். ஆதலால், அலுவலகங்களிலும் அச்சகங்களிலும் தமிழ்ப் புலவர்கள் அமர்த்தப்படல் வேண்டும். அங்ஙனமாயின், தமிழை யாண்டுந் திருத்தமாகக் கண்டு கேட்டு மகிழலாம்.

இளமையிலிருந்தே சொற்களைத் திருத்தமாகப் பேசவும் எழுதவுங் கற்றுக்கொள்வதில் மாணவர்க்கு ஓர் ஊக்கம் உண்டுபண்ணுதற்கே இக் கதை நூல் எழுந்தது.

—கழகம்.

பிழையின்றிப் பேசுக

[தமிழரசி கூறுவது]

1

ஒருநாள் காலையில் என் அருமைத் தந்தையார் என்னை அழைத்து, "அம்மா! தமிழரசி! உன் தங்கை வயிரமணி படுக்கையிலிருந்து எழுந்துவிட்டாளா?" என்று கேட்டார்கள்.

"அப்பா! படுக்கையில் முழிச்சுக்கொண்டு படுத்திருக்கின்றாள்" என்றேன்.

"அம்மா! முழிச்சுக்கொண்டு என்பது பிழையான சொல். **விழித்துக்**கொண்டு என்பதே திருத்தமான சொல். 'கண்விழி' என்று கேட்கவில்லையா? சொற்களைத் திருத்தமாகச் சொன்னால்மட்டும் அவற்றைப் பிழையின்றித் திருத்தமாக எழுதலாம்," என்றார்கள்.

பின்பு வயிரமணி எழுந்து வந்தாள். "அக்கா! அம்மா புட்டு அவிக்கிறார்கள். உனக்குக் கிடையாது. எல்லாப் புட்டையும் நான் ஒரே முழுங்காய் முழுங்கிவிடுவேன்," என்று மிக்க மகிழ்ச்சியோடு சொன்னாள்.

உடனே அப்பா, "வயிரமணி பேசியதில் இரண்டு சொற்கள் பிழையுள்ளன. புட்டு என்

பதுபிழை. **பிட்டு** என்பதே திருத்தமான சொல். பிட்டு என்ற சொல் 'பிள்' (பிதிர்) என்ற வினைச் சொல்லிலிருந்து வந்தது. 'ஒரே முழுங்காய் முழுங்கி விடுவேன்' என்பதை ஒரே **விழுங்காய் விழுங்கி**விடுவேன் என்று சொல்லுதல் வேண்டும். முழுங்குதல் பிழைபட்ட சொல்; **விழுங்குதல்** திருத்தமான சொல்,'' என்றார்கள்.

"அப்பா! நான் படித்த 'தமிழ்ப் பாடம்' முதற் புத்தகத்தில், 'ஓராசிரியர் புட்டு என்று சொல்வரிசையிலும் சொற்றொடர் வரிசையிலும் எழுதி யிருக்கின்றாரே!'' என்றேன்.

''அம்மா! சில தமிழ்ப்பாட நூல்களில் இதைப் போன்ற பிழைகள் பல இருக்கின்றன. அதிலும் கணக்கு, வரலாறு, பூகோளம் முதலிய நூல்களில் காணப்படும் பிழைகட்குக் கணக்கில்லை. கருத்தில்லாமலே எழுதுவதனாலும், தமிழை முறையாகப் படிக்காதவர்கள் எழுதுவதனாலும் ஏற்பட்ட பிழைகளே அவை. மேலும், மக்கள் திருத்தமாகச் சொற்களைப் பேசினால், எழுதும்போது பிழை ஏற்படாது. பிழைபடச் சொற்களைப் பேச்சில் வழங்குவதனால், கேட்டபடி பிழையாக அவற்றை எழுத நேர்கின்றது,'' என்றார்கள்.

அப்போது அன்னையார் என்னைக் கூப்பிட்டு, "அம்மா! அப்பாவுக்கு எண்ணெயும் புண்ணாக்கும் எடுத்துக்கொண்டு போய்க் கொடு. நீயும் தங்கையும் எண்ணெ தேய்த்துக் குளியுங்

கள். அப்பாவும் குளிப்பார்கள்,'' என்று சொன்ஞர்கள்.

அப்பா, என்னைப் பார்த்து, "அம்மா தமிழரசி! உன் அன்னையார் என்ன சொல்லினர்?'' என்று கேட்டார்கள்.

"அப்பா! எண்ணையும் புண்ணுக்கும் எடுத்துக் கொடு என்றனர்,'' என்று கூறினேன்.

"அம்மா! எண்ணை என்பது தவறு. **எண்ணெய்** (எள்+நெய்) என்பதே சரியான சொல்,'' என்ருர்கள்.

அப்படிச் சொல்லுகிறபோதே நான்,"அப்பா எள்ளிலிருந்து எடுக்கிற நெய்க்குத்தானே எண்ணெய் என்று பெயர். நிலக்கடலை யெண்ணெய், வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய், புன்னையெண்ணெய், தேங்காயெண்ணெய் என்று சொல்லுகிருர்களே,'' என்றேன்.

"அம்மா! நன்று கேட்டாய்! எள்ளிலிருந்து எடுக்கிற நெய்தான் எண்ணெய். ஏனைய பொருள்களிலிருந்து கிடைக்கிற நெய்யை எண்ணெய் என்று சொல்வது தவறே. உள்ளபடி நிலக்கடலை நெய், வேப்பநெய், ஆமணக்கு நெய், புன்னை நெய், தேங்காய் நெய் என்றுதான் சொல்லுதல் வேண்டும். பெருவழக்காக மக்கள் எள் நெய்யைக் கையாளுவதனுல், எல்லா நெய்யும் எண்ணெய் என்று வழங்கப்பட்டது. இப்போது அது மரபுச் சொல்லாய்விட்டது. ஆத

லால் பிழையாகாது. மற்றப் பொருள்களிலிருந்து கிடைக்கிற நெய்யை எண்ணெய் என்பதனால், எள்ளிலிருந்து கிடைக்கிற நெய் **நல்லெண் ணெய்** எனப்பட்டது.

"உன் அன்னையார் புண்ணாக்கு என்று சொன்னதும் தவறு. **பிண்ணாக்கு** என்பதே சரியான சொல். புண்ணாக்கு என்றால் 'புண் உடைய நாக்கு' என்று பொருளாகும்.

"இங்கே உனக்கு ஒன்று சொல்ல விரும்பு கின்றேன். பன்னிரண்டு ஆண்டுகட்கு முன் சென்னையில் **திரு. பா. வே. மாணிக்க நாயக்கர்** என்னும் பேரறிஞர் ஒருவர் இருந்தார். அவர் தமிழ் ஒலி ஆராய்ச்சியில் மிக வல்லவர். பிற மொழி கலவாமல் தமிழைத் திருத்தமாகப் பேசு வர்; எழுதுவர். அவர் பொறித் துறைக் கண் காணிப்பாள (சூப்பரின்டெண்டிங் எஞ்சினீயர்) ராக விளங்கினர். இப்போது அமைந்திருக்கும் மேட்டூர் அணைக்கட்டுக்கு இடம் பார்த்துக் குறித்துக்கொடுத்த அறிஞர் இவரே. இவர் மனைவியார் ஒருநாள் இவருக்கு எழுதிய கடி தத்தில் பிண்ணாக்கு என்ற சொல்லைப் புண் ணாக்கு என்று பிழைபட எழுதி யிருந்தாராம். அதனைப் பார்த்து, நாயக்கர் தம் மனைவியார்க்கு அனுப்பிய விடையில், "கடிதத்தில் கண்ட புண்ணாக்கு என் மனத்தைப் பெரிதும் புண்ணாக்கி விட்டது" என்று எழுதினாராம்.!" என்று என்

அப்பா சொன்னார்கள். அதைக்கேட்டு நாங்கள் சிரித்த சிரிப்பினால் எங்கள் வயிறும் புண்ணாய் விட்டது.

பின்பு, "பிண்ணாக்கைப் புண்ணாக்கு என்று எழுதுவதுபோல் சிகைக்காயையும் சீயக்காய் என்று பிழைபட எழுதுகின்றனர்," என்று சொல்லி எங்களுக்கு மகிழ்ச்சி யூட்டினார்கள்.

2

"அந்நேரத்தில் யாரோ ஒருவர் வந்து அப்பாவைக் கூப்பிட்டார்கள்.

"ஐயா! உங்கள் பக்கத்து வீட்டில் இப்போது யாரும் குடிவரவில்லையோ! அது குடக்கூலிக்கு விடப்படுமா? அதற்குக் குடக்கூலி எவ்வளவு?" என்றனர்.

அப்பா வந்தவரிடம் பேசிவிட்டு வீட்டுக்குள் வந்ததும், "அப்பா! குடக்கூலி என்பது பிழை என்று எனக்குத் தோன்றுகிறது. குடியிருப்பதற்குக் கொடுக்கிற கூலி குடிக்கூலி என்றுதானே இருக்கவேண்டும்," என்றேன்.

அதைக் கேட்டு அப்பா அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை.

"அம்மா! இந்த முறையிலேதான் ஆராய்ந்து பிழை கண்டுபிடிக்க வேண்டும்! சென்னையில் எங்கே பார்த்தாலும் 'குடக்கூலிக்கு விடப்படும்' என்று அச்சிட்ட விளம்பர அட்டைகள் வீடு

களின் முகப்பில் தொங்குகின்றன. திருநெல் வேலி மாவட்டத் (ஜில்லா) தில் 'வீடு வாடகைக்கு விடப்படும்' என்னும் அட்டையே தொங்கும்," என்றார்கள்.

உடனே, "அப்பா! நாம் சென்னையிலுள்ள தெருவெல்லாம் போய்க் 'குடக்கூலி' என்ற அட்டையில் 'ட' வை 'டி' எனத் திருத்திவரலாமா?" என்றேன்.

அதற்கு, அப்பா, "அம்மா! யானும் அப்படிச் செய்ய எண்ணியதுண்டு. அது, பெரிய வேலை. சென்னை பெரிய நகரமாயிற்றே. தமிழாசிரியர்கள் பார்வையின்றி எந்த அறிக்கையும் எந்த நூலும், யாரும் வெளியிடக்கூடாது என்று அரசினரே சட்டம் பிறப்பித்தல் வேண்டும்," என்றார்கள்.

அப்பாவுக்கு ஒருவர் தரவேண்டிய பணத்தைக் கொடுக்காமையால், அவர்மேல் வழக்குப் போட்டதில், அப்பா பக்கம் தீர்ப்பாயிற்று. கடன் வாங்கியவர் அப்பாவிடம் வந்து, "ஐயா! யான் ஏழை. வட்டியும் முதலும் கொண்டுவந்திருக்கிறேன். சிலவுதுகை மட்டும் தள்ளித் தர வேண்டும்," என்று கெஞ்சிக் கேட்டார்.

அப்பா அவரிடம் ஒரு தாளையும் எழுதுகோலையும் கொடுத்து, "ஐயா! நீர் சொல்லியதை இதில் எழுதிக் கொடும்; பார்க்கலாம்," என்றார்

கள். கடன் பெற்றவர் எழுதியதில் சிலவு துகை என்று எழுதப்பட்டிருந்தது.

அதை அப்பா என்னிடம் காட்டி, "அம்மா தமிழரசி! சிலவு என்பது தவறு; **செலவு** என்பதே திருத்தமான சொல். கையைவிட்டுச் செல்வது செலவு, கைக்கு வருவது வரவு. ஆதலினுற்றான், 'வரவு செலவு கணக்கைப் பார்த்தல் வேண்டும்' என்று எல்லாரும் சொல்லுவதை நீ கேட்டிருப்பாய். அப்படியே துகை என்பதும் பிழை. **தொகை** என்பதே திருத்தம். **தொகை** என்பது 'தொகு' (கூட்டு) என்ற சொல்லிலிருந்து வந்தது," என்றூர்கள்.

3

"தமிழரசி! வெளியே பட்டுநூல் கயறு விற்கிறவர் குரல் கேட்கிறது. அவரைக் கூப்பிடு. உன் தம்பி திருநாவுக்கரசுக்கு அருணுக்கயறு வாங்க வேண்டும்," என்று அன்னையார் ஏவினுர்கள்.

அதைக் கேட்ட அப்பா, "அம்மா தமிழரசி! இப்போது உன் அன்னையார் இரண்டு பிழைகள் செய்து விட்டனர். **கயிறு** என்பதைக் கயறு என்றும், **அரைஞாண் கயிற்றை** அருணுக் கயறு என்றும் பிழையாகச் சொல்லினர். ஞாண், நாண் என்ற சொற்கள் கயிற்றைக் குறிக்கும். எனவே அரை ஞாண் அல்லது

அரைநாண் என்று சொல்லலாம். சிலர் 'அண்ணக்கயறு' என்றும் பிழையாகச் சொல்லு கின்றனர்,'' என்றார்கள்.

கயிறு விற்பவரிடம் நான்கு முழ அரை ஞாண் கயிறு வாங்கினோம்.

பிறகு அன்னையார், "தமிழரசி! திருநாவுக் கரசு துடையில் ஒரு புண் இருக்கிறது. அவன் அதோ சுவற்றில் ஆணியை ஓரிடத்திலிருந்து புடுங்குவதும், மற்றோரிடத்தில் அடிப்பதுமாக இருக்கின்றான். அவன் கையிலிருக்கிற கல்லைப் புடுங்கிப்போடு. இன்று அவனுக்கு எண்ணெய் முழுக்கு வேண்டாம். வெறும் வெந்நீரில் முழுக்காட்டு,'' என்றார்கள்.

அதைக் கேட்டதும் அப்பா, என்னை நோக்கி, "அம்மா! உன் அன்னையார் **தொடை** என்பதைத் துடை என்று பிழையாகச் சொன் னதைக் கவனித்தாயா? **தொடை** என்பது 'தொடு' என்ற சொல்லிலிருந்து வந்தது. துடை என்பதற்குத் 'தடவி நீக்கு' என்பது பொருள்.

"மேலும் **பிடுங்கி** என்பதைப் புடுங்கி என் றும், **சுவரில்** (சுவர்+இல்) என்பதைச் சுவற்றில் என்றும் பிழைபடச் சொல்லினர். '**கிணற்றில்** (கிணறு+இல்) நீரெடுத்தல்' என்பது சரியான தொடர். அதுபோல, சுவற்றில் அடித்தான் என்றால் அதற்கு முதற்சொல் சுவறு என்றாகும்.

அது பிழை. **சுவர்** என்பதே சரியான சொல். ஆதலால் **சுவரில்** அடித்தான் என்பது திருத்த மாகும்.

சுவர் + இல் = சுவரில்	கிணறு + இல் = கிணற்றில்
சுவர் + ஐ = சுவரை	கிணறு + ஐ = கிணற்றை
மோர் + இல் = மோரில்	வயிறு + இல் = வயிற்றில்
மோர் + ஐ = மோரை	வயிறு + ஐ = வயிற்றை

மேற்கண்ட சொற்களை நினைவில் வைத்துக் கொள்,'' என்றார்கள்.

பின்பு அன்னையார் என்னைக் கூப்பிட்டு, “அம்மா! காய்கரி நறுக்குவதற்கு அருகாமணை எடுத்துவா,'' என்று சொல்லினர்.

உடனே அப்பா, “அம்மா! அருகாமணை என்பது தவறு. **அரிவாள் மணை** (அரிகிற வாள் அமைந்த மணை) என்பதே திருத்தமான சொல். “காய்கரி என்பதுந் தவறு. **காய்கறி** என்பதே திருத்தமான சொல். காய்கறி என்பது கறிக் குரிய காய் என்று பொருள்படும். **அடுப்புக்கரி** யை அடுப்புக்கறி என்று பிழைபட எழுது கின்றனர். கரிச்சாக்குகள் விற்கிற கடைகளில், ‘இங்கே புளியங்கறி, காட்டுக்கறி விற்கப்படும்' என்ற விளம்பரப் பலகைகள் தொங்குகின்றன. **புளியங்கரி, காட்டுக்கரி** என்றே இருக்க வேண்டும்,'' என்றார்கள்.

“அம்மா! ‘**விற்கப்படும்** என்ற சொல்லை' விற்க்கப்படும்' என்றும், ‘விர்க்கப்படும்' என்றும்

எழுதுகின்றனர். விற்கப்படும் 'என்பதில்' 'வில்' பகுதி 'ல்' 'ற்' ஆகிற போது பக்கத்தில் 'க்' என்ற ஒற்று வராது. 'விர்க்கப்படும்' என்பதாயின் 'விர்' என்பதே பகுதி. விர் என்னுஞ் சொல் தமிழில் கிடையாது. 'பார்' என்ற தமிழ்ச் சொல் பார்க்கப்படும் என வரும். அடியிற் கண்ட சொற்களை நினைவில் வைத்துக் கொண்டால் போதுமானது.

வில்	- விற்கப்படும்	பார்	- பார்க்கப்படும்
கல்	- கற்கப்படும்	வார்	- வார்க்கப்படும்
ஏல்	- ஏற்கப்படும்	சேர்	- சேர்க்கப்படும்"

என்றார்கள்.

4

அன்னையார் என்னை அழைத்து, "அம்மா! உன் அப்பாவின் வேஷ்டி மெத்தைமேல் காயப் போட்டிருக்கிறது. அதனை எடுத்துக் கொண்டு வந்து கொடு," என்று சொல்லினர்.

உடனே அப்பா "வேஷ்டி என்ற சொல் என் உள்ளத்தைச் சுடுகின்றது. வேஷ்டி என்ற சொல் சமஸ்க்ருத அகராதியிலும் கிடையாது. **வேட்டி** என்ற தூய தமிழ்ச் சொல்லை வேஷ்டி என்று பிற சொல் போலத் திரித்து வழங்குகின்றனரே! என்ன கொடுமை! **வேட்டி** என்பது **வெட்டு** என்ற வினைச் சொல்லிலிருந்து வந்தது. **துண்டு**, **அறுவை** என்னுந்

துணிகளின் பெயர்களும் **துணி**, **அறு**, என்ற வினைச் சொற்களிலிருந்து வந்தன.

"வேட்டியை வேஷ்டி என்பது போல, **குட்டம்**, **கட்டம்** என்ற செந்தமிழ்ச் சொற்களையும் குஷ்டம், கஷ்டம் என்று திரித்து வழங்குகின்றனர்," என்றனர்.

இங்ஙனம் நாங்கள் பேசிக்கொண் டிருக்கும் போது, ஒரு பையன் பேசும் பட விளம்பரம் ஒன்றைக் கொண்டு வந்து தந்தான். அதில், "இன்று முதல் மினர்வா டாக்கீஸில், நந்தனார் படம் காட்டப்படும். பட்டினத்தார் படத்தில் நடித்துப் புகழ்பெற்ற இசையரசு தண்டபாணி தேசிகர் நடிக்கின்றனர். தினந்தோறும் மூன்று காக்ஷிகள் உண்டு" என்று அச்சிட்டிருந்தது.

அப்பா, "அம்மா! **காட்சி** என்ற தமிழ்ச் சொல்லையே காக்ஷி என்று எழுதுகின்றனர். காக்ஷி என்று எழுதுவதனால் அது சமஸ்க்ருதச் சொல்போல் ஆகின்றது. ஷ, ஸ, ஜ, க்ஷ, ஹ என்ற ஐந்து சமஸ்கிருத எழுத்துக்களைத் தமிழ்ச் சொற்களிற் பயன்படுத்துவதனால் சில தூய தமிழ்ச் சொற்களை நாம் இழந்துவருகின்றோம் அதில் நாம் விழிப்பாக இருக்கவேண்டும்.

"காக்ஷி என்ற சொல் காண் என்ற வினைச் சொல்லிலிருந்து வந்தது. காண் + சி = காட்சி.

காட்சியைக் காக்ஷி என்றதுபோல் மாட்சி, ஆட்சி என்ற சொற்களை மாக்ஷி ஆக்ஷி என்று எழுதுகின்றனர். மாண் + சி = மாட்சி, ஆள் + சி = ஆட்சி. 'மாட்சிமை தங்கிய அரசன் நல்ல ஆட்சி புரிந்தான்' என்ற தொடரைக் கேட்க; அஃது எவ்வளவு இனிமையும் பொருள் விளக்கமும் உடையதாய் இருக்கின்றது," என்றார்கள்.

5

என் அன்னையார் வீட்டுச்செலவு கணக்கை அடியிற் கண்டபடி எழுதிவைத்திருந்தனர்.

வெண்ணை	1 விசை	3—0—0
வெண்டங்காய்	½ விசை	0—4—0
பாவக்காய்	½ விசை	0—2—0
உப்பு	1 படி	0—4—0
கருவேப்பலை		0—0—6
புளி	1 விசை	0—9—0
துவரம் பறுப்பு	2 படி	1—0—0
உருளைக்கிளங்கு	½ விசை	0—4—0
அப்பழம்	100க்கு	0—8—0
வைக்கல்	1 கட்டு	1—0—0

அப்பா அவர்கள் அந்தக் கணக்கைப் பார்த்து வெண்ணெய், வெண்டைக்காய், பாகற்காய், கறிவேப்பிலை, துவரம் பருப்பு, உருளைக் கிழங்கு, அப்பளம், வைக்கோல், என்று திருத்திக் கொடுத்தார்கள்.

பின்னர் அஞ்சற்காரர் (தபால்காரர்) அப்பா வினிடம் ஒரு திருமண அழைப்புக் கடிதம் கொண்டுவந்து தந்தார். அதனைப் படிக்குமாறு அப்பா என்னிடம் கொடுத்தார்கள். அது வருமாறு:—

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் தாரண ஆண்டு கார்த்திகைத் திங்கள், உஅ-ம் நாள் (10-12-44) புதன்கிழமை காலை 6 மணிக்கு மேல் மீன ஓரையில்,

என் மூத்த மகள் திருவளர் செல்வி **வடிவரசிக்கும்,**	நெல்லை மாணிக்க முதலியார் மூத்த மகன் திருவளர் செல்வன் **இளங்கோவுக்கும்,**

சென்னைப் பவழக்காரத் தெரு 7 ஆம் எண்ணுள்ள வீட்டில் நடைபெறும் திருமணத்திற்கும், அன்று மாலை நடைபெறும் இசைப்பாட்டுக்கும் தாங்கள் தங்கள் உறவினருடனும் நண்பருடனும் வந்திருந்து மணமக்களை வாழ்த்துமாறு கோறுகிறேன்.

இங்ஙனம்

சு. முறுகப்ப முதலியார்.

தங்கள் வரவை எதிர்பார்க்கும்:—

சு. ஆருமுக முதலியார், சு. அளகப்ப முதலியார்.

"அம்மா! என் நண்பர் மகளுக்குத் திருமணம். அதற்காக இந்த அழைப்புத்தாள் வந்திருக்கிறது. இது, இப்போது நல்ல தமிழில் வந்தி

ருக்கிறது. தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தார் வெளியிட்டிருக்கிற 'அழைப்பிதழ் எழுது முறை' என்ற நூலைப் பார்த்து எழுதியிருக்கின்றனர். என்ருலும் ரகர, றகர; ழகர, ளகர வேறுபாடு தெரியாமல் நல்ல மங்கலத் தாளில் சில பிழைகள் காணப்படுகின்றன.

"இந்தத் தாளில் 'வாழ்த்துமாறு கோறுகிறேன்' என்று எழுதியிருப்பது பிழை. 'கோறல்' என்பதற்குக் கொல்லுதல் என்பது பொருள். 'வாழ்த்துமாறு **கோருகிறேன்**' என்றிருத்தல் வேண்டும். 'கோருகிறேன்' என்பதற்கு 'வேண்டுகிறேன்' என்பது பொருள்.

"**வடிவரசி, இளங்கோ** என்ற மணமக்களின்பெயர் வடிவறசி, இழங்கோ என்று பிழையாக எழுதப்பட்டிருக்கின்றன. **முருகப்பன்** என்ற பெயரை முறுகப்பன் என்றும், **ஆறுமுகம், அழகப்பன்** என்ற பெயர்களை ஆருமுகம், அளகப்பன் என்றும் தவருக இதில் அவர்கள் அச்சிட்டிருப்பதையும் கவனி."

"**அழகு, இளமை** என்ற பொருள் தரும் **முருகு** என்ற சொல்லிலிருந்து முருகன் என்ற பெயர் வந்தது. 'முறுகு' என்ருல் திருகு எனப் பொருள்படும்," என்று விளக்கினர்கள்.

6

அப்போது அன்னையார் அப்பளம் பொரித்துக்கொண்டிருந்தனர். என் தங்கை வயிரமணி

அதில் ஒன்றை எடுத்துவந்து, "அக்கா! அப்ப ளம் ரொம்ப சுவையாயிருக்கிறது. உனக்கு ஒன்று வேண்டுமா?" என்ருள்.

அப்பா, "தமிழரசி! உன் தங்கை பேசியதில் 'ரொம்ப' என்ற சொல்லைக் கேட்டாயா? **நிரம்ப** என்பதை ரெம்ப, ரொம்ப என்று கொச்சை யாக நம் மக்கள் பேசுகின்றனர். பழைய இலக்கி யங்களில் ரொம்ப என்ற சொல் கிடையாது. தமி ழில் ரகரம் மொழிக்கு முதலில் வராது. அப்படி யிருக்க இப்போது சிலர் ரொம்ப என்ற சொல் லைத் தாராளமாய்த் தாம் எழுதும் நூல்களிலும் தாள்களிலும் எடுத்தாளுகின்றனர். ஆனல், 'ரொம்ப' என்பது பிழைபட்ட சொல்லே.

"மேலும் அவர்கள் **சொற்ருெடர்**, **தோற்பை**, **பொற்ருேடு**, **ஆட்காட்டி** என்ற தொடர் மொழி களைச் சொல்த்தொடர், தோல்ப்பை, பொன்த் தோடு, ஆள்க்காட்டி என்று எழுதிவருகின்ற னர். அவை முற்றிலும் பிழையே. சொற்ருெடர், தோற்பை, பொற்ருேடு, ஆட்காட்டி என்பன இயற்கையான இனிய ஓசையுடையனவாகவும், சொல்த்தொடர், தோல்ப்பை, பொன்த்தோடு, ஆள்க்காட்டி என்பன செயற்கையான இன்ன ஓசையுடையனவாகவும் இருக்கின்றன அல் லவா? தமிழ் இலக்கணம் செவிக்கு இனிய ஓசை கருதியே அமைக்கப்பட் டிருக்கிறது," என்ருர்கள்.

“அப்பா! இப்போது நான் ஒன்று சொல்ல விரும்புகின்றேன். அவர்கள் தாங்கள் நூல்களில் சொற்றொடரைச் சொல்த்தொடர் என்று எழுது வதைவிடச் சில கணக்கு நூல்களுக்கு நூல் முகப்பில் குறியிட்டு விளக்கம் எழுதிச் சேர்த் திருக்கின்றமைபோல் அடியிற் கண்டபடி புணரியல் முறையை எழுதிச் சேர்க்கலாமே.

சொல் + தொடர் = சொற்றொடர்
தோல் + பை = தோற்பை
பொன் + தோடு = பொற்றோடு
ஆள் + காட்டி = ஆட்காட்டி”

என்றேன்.

அப்பா, “ஆம், அப்படிச் செய்யலாம், உன் அறிவே அறிவு,” என்று சொல்லி மகிழ்ந் தார்கள்.

7

எங்கள் வீட்டுக்கு ஒரு தமிழ்ச் செய்தித் தாள் வருகின்றது. அதனை நான் நாடோறும் செய்திக்காகப் படிப்பதுண்டு. “அப்பா! நம் வீட் டுக்கு வருகிற தமிழ்ச் செய்தித்தாளில் ‘வாழை பழம்’ ‘அந்த பையன்’, ‘நன்றாய் பேசினர்,’ ‘செய்தியை கூறினர்’ என்று ஒற்றுக்கள் போடா மலே சொற்றொடர்களை இதழாசிரியர் எழுது கின்றனரே. அவை அறுபட்ட ஓசையுடையன வாய்ச் செவிக்கு இனிமை தரவில்லையே.

'வாழைப் பழம்' **'அந்தப் பையன்,'** **'நன்றாய்ப் பேசினார்,'** **'செய்தியைக் கூறினார்,'** என்று சொல்லும்போது ஓசை நிறைவுடையனவாய்ச் செவிக்கு எத்துணை இன்பந் தருகின்றன! இவர்கள் ஏன் ஒற்றுப் போடாமல் எழுதுகின்றனர்?'' என்றேன்.

அதற்கு அப்பா, ''ஒற்றுப்போடாமல் எழுதுகிறதென்பதே அவர்கள் கோட்பாடாம். இலக்கணத்திலுள்ள புணரியல் நூற்பாக்களைக் கற்றுக் கொள்வதற்கு அவர்கட்கு நேரமில்லையாம்; நேரமிருப்பினும் பொறுமையில்லையாம். இருக்கட்டும்; ஒலித்துப் பார்த்தாலே ஒற்று மிகும் மிகாது என்பதை எளிதாய்த் தெரிந்துகொள்ளலாமே!'' என்றார்கள்.

''அப்பா! நான் எழுதுகிற கட்டுரைகளில் ஒற்றுப் பிழைகளை என் ஆசிரியர் கண்டுபிடிப்பதில்லை. சொற்களை ஒலித்துப் பார்த்து எழுதுவேன். ஒற்று இங்கே வேண்டும், இங்கே வேண்டா என்பது தானே தெரிந்துவிடுகிறது,'' என்றேன்.

பின்பு அப்பா, ''அம்மா! நான் இலக்கணம் கற்றிருந்தபோதிலும் நூற்பாக்கள் நினைவிலிருப்பதில்லை. என்றாலும், என் எழுத்துக்களில் ஒற்றுப் பிழை நேர்வதில்லை.

''அம்மா! சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் **'தமிழைப் பிழை நீக்கி எழுது**

முறை' என்ற ஓர் அரிய நூல் எளிய விலைக்குக் கிடைக்கின்றது. இலக்கண விதி ஒன்றும் இல்லாமலே பிழையின்றி எழுதுமுறை அதில் காட்டியிருக்கின்றது. பிழையில்லாமல் எழுதுவ தற்கும் பேசுவதற்கும் அது சிறந்த துணை புரியும். மாணவர்களும், ஆசிரியர்களும், எழுத்தாளர்களும், இதழாசிரியர்களும் அதை வாங்கித் துணையாக வைத்துப் பார்வையிட்டு, நம் இனிய தமிழைப் பிழையில்லாமல் இலக்கண வரம்பு கெடாமல் எழுதுவார்களாக!'' என்றார்கள்.

அப்போது, மட்டற்ற மகிழ்ச்சியால் என் நாவிலிருந்து "தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க!" என்ற ஒலி பன்முறை எழுந்து ஒலித்தது.

வாழி தமிழ்!

—*—

Printed by S. Viswanathan at The Central Art Press, 14, Singanna Naick Street, G.T., Madras